**<u>DEPOSITION OF WITNESS (Code of Civil Procedure)</u>**

**IN THE COURT OF DISTRICT AND SESSIONS COURT,**

**COMMUNAL CLASH CASES, MADURAI**

**<u>S.C. NO. 5 / 2010</u>**

**<u>அரசு தரப்பு சாட்சி</u> - 44**

| | |
|---|---|
| Name | : குப்புசாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed by Thiru.P.Ramakrishnan, Translator of this court in accordance with the provision of Oaths Act of the day of 18th September 2019.

**<u>முதல்விசாரணை</u>**

நான் தற்போது குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறையில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.1.2008 ம் தேதி அன்று குற்றாலாம் ஆய்வாளராக பணிபுரிந்த போது உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் தென்காசி காவல் நிலைய குற்ற எண் 108/2008, ச/பி 324, 3 மற்றும் 5 வெடிபொருள் சட்டத்தின் படியான வழக்கை தென்காசி ஆய்வாளர் அன்புபிரகாசம் என்பவரர் பதிவு செய்து, தென்காசி ஆய்வாளார் சந்திரசேகர் என்பவரால் முதல் விசாரணை செய்யப்பட்டு இருந்ததை, நான் மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகள் முஜிபுர் ரகுமான், காஜா மைதீன், அக்பர் அலி, முகமது அமுதுல்லா, முத்தலீப், பரஹாத்துல்லா, பீர் முகமது ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி குண்டு வெடிப்பு சம்பவ இடமான தென்காசி புதிய பேருந்து நிலையத்தை வெடிபொருள் நிபுணர்களுடன் பார்வையிட்டும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை பார்வையிட்டேன். வெடிகுண்டு செயலிழப்பு துணை கண்காணிப்பாளர் ஆசீர் ஜெயக்குமார் அவர்களிடம் அவற்றைக் காட்டியும் அது குறித்து மேற்படி வெடிகுண்டானது

உயரழுத்த வெடி குண்டு வகையைச் சார்ந்தது பெரிய அளவில் உயிர் சேதங்கள் ஏற்படுத்தக்கூடியது அல்ல என்று தெரிவித்தார். மேற்படி வழக்கை 28.01.2008 ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகள் சாகுல் ஹமீது, பாதுஷா, பீர் அப்துல்லா, ஹஜ்மீர், முகமது மைதீன், தீன் அஜீஸ், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சம்பவத்தில் கைப்பற்றப்பட்ட மேலும் வெடி குண்டு நிபுணர்களால் அறிவியல் உதவியாளர்களால் எடுத்து ஆஜர் செய்யப்பட்ட அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்ட 1 முதல் 11 வரையிலான சொத்துக்களை RPR No.101/2008 நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. அவை சா.பொ. 21 முதல் 31 வரை குறியீடு செய்யப்படுகிறது. வெடி குண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழப்பு செய்யப்படும் பிரிவின் ஆய்வாளர் பழனி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.01.2008 ம் தேதி சாட்சிகள் ஸ்ரீரங்கம், காளையப்பன், சங்கரசுப்பிரமணியன், துரைசிங்கம், பொன் சுவாமிநாதன், குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சாட்சிகள் தென்காசியில் ஏற்பட்ட பதட்டம், பீதி, இயல்பு வாழ்க்கை பாதிப்பு முதலியவற்றை வாக்குமூலங்களாக தந்தனர். மேற்படி வழக்கில் தொடர்புடைய மற்றொரு வழக்கும் இச்சம்பவத்திற்கு சிறிது நேரத்திற்கு முன்பு நடந்து, பரபரப்பான சூழ்நிலையில் மேற்படி வழக்கை கண்டுபிடிக்கவும், இயல்பு நிலையை கொண்டு வரவும் உயர்அதிகாரிகள் முகாமிட்டு சிறப்பு புலனாய்வு குழுவாக ஆய்வாளார் ஜமால், ஆனந்தகுமார்,சுரேஷ்குமார், உதவி ஆய்வாளர்கள் அன்புபிரகாஷ், ஆறுமுகச்சாமி, சீனிவாசன், உள்ளிட்டோர்கள் வெளிப்படையாகவும் விசாரித்து வந்தனர். இந்த வெடி குண்டு சம்பவங்கள் குறிப்பிட்ட இயக்கத்தினர் செய்து கலவரம் ஏற்படுத்த திட்டமிட்டதாகவும், RSS அலுவலகத்தில் சம்பவத்தன்று தெரு விளக்குள் அனைக்கப்பட்டதும், கடைசியாக மேற்படி அலுவலகத்தில் தென்காசி பழைய கலவர வழக்குகளில் சம்மந்தப்பட்ட KTC குமார் என்பவரும், அவருடன் பாலமுருகன் என்பவரும், சம்பவத்திற்கு முன்பு இறுதியாக சென்று வந்துள்ளனர் என்றும், மேற்படி நபர்கள் அந்த விசாரணை சமயத்தில் ஆஜரில் இல்லை என்றும், மேற்படி

சம்பவங்களுக்கு மூளையாக ரவி என்பவர் செயல்பட்டு இருக்கிறார் என்ற தகவல் தெரியவந்தது. மேற்படி வழக்குகள் விசாரணையில் இருந்த நிலையில் 4.2.2008 ம் தேதி அன்று தனிப்படையினரால் தேடப்பட்டு வந்த எதிரி குமார் என்ற KTC குமார் என்பவர் இனியும் தலைமறைவாக இருக்க முடியாது என்ற நிலையில் கடுமையான மனநிலையில் 10.15 மணிக்கு தென்காசி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று வட்டாட்சியரிடம் 24.01.2008 தேதி நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்கள் தன்னால் தன்னைச் சேர்ந்தவர்களாலும் ஏற்படுத்தப்பட்டது என்று தன் கைப்பட எழுதிக்கொடுத்து ஆஜரானவரை வட்டாட்சியர் அவர்கள் விசாரித்து சாட்சிகள் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி சாட்சிகள் மூலமே ஆவணங்களுடன் எதிரியை என்னிடம் ஒப்படைத்தார். தென்காசி காவல் நிலையத்தில் வைத்து 11.15 மணிக்கு வட்டாட்சியர் கொடுத்த ஆவணங்களையும், பரிசீலித்த பின்பு எதிரி KTC குமாரை 11.30 மணியளவில் சாட்சிகள் முன்பாக காவல் நிலையத்தில் வைத்து கைது செய்தேன். அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அடிப்படையில் எதிரி சொன்ன தென்காசி பழைய அரசு மருத்துவமனை பின்புறம் இருந்து எடுத்து ஆஜர் செய்த வெடி குண்டின் உதிரி பாகங்களை 13.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் மூலம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் முன்னிலையில் கைப்பற்றினேன் அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.58 ஆகும். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 15 மணிக்கு எதிரி ரவி என்கின்ற ஆறுமுகம், சர்மா என்ற நாராயண சர்மா, ஆகியோரை இலஞ்சி குமாரர் கோவில் அருகே வைத்து கைது செய்தேன். அவர்களது விசாரணையில் எதிரி KTC குமார் சொன்ன விவரங்களையே சொன்னதால் அவர்களிடம் தனியாக ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. எதிரி ரவி என்கிற ஆறுமுகம் தன் கையில் வைத்திருந்து ஆஜர் செய்த கப்ளிங் வெடி குண்டுகளை அதே சாட்சிகள் முன்பு 15.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.59 ஆகும். எதிரி சர்மா என்ற நாராயண சர்மாவை 16.00 மணிக்கு விசாரணை செய்து அவர் 16.45 மணிக்கு ஆஜர் செய்த வெடி

குண்டுடன் இணைக்கப்படும் உதிரி பாகங்களை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.60 ஆகும். மேற்படி வழக்கில் எதிரிகள் ஒன்று கூடி சதி திட்டம் தீட்டியுள்ளதால் வழக்கின் சட்டப் பிரிவுகளுடன் இதச சட்டப்பிரிவு 120(b)யை சேர்க்கப்பட்டது. 5.2.2008 ம் தேதி சாட்சிகள் கண்ணன், வெங்கடேசன், உமாபதி, முருகன், ஆறுமுகம், ஐயப்பன், அம்மையப்பன், முருகேசன், செல்வராஜ், சங்கரவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரிகளை பாதுகாப்பு கருதி நடுவர் அவர்களின் உத்தரவின் பேரில் எதிரி ரவி நாகர்கோவில் கிளை சிறைக்கும், எதிரி KTC குமாரை ஸ்ரீவைக்குண்டம் கிளை சிறைக்கும், எதிரி சர்மாவை நான்குநேரி கிளை சிறைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். தனிப்படை தகவலின் பேரில் குத்துக்கல் வலசை கைக்காட்டி பக்கம் நின்றுகொண்டிருந்த எதிரி முருகனை சாட்சிகள் ஐயப்பன், அம்மையப்பன் முன்னிலையில் கைது செய்தேன். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து எதிரி கையில் வைத்திருந்த கப்ளிங் வெடி குண்டு இரண்டை கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.61. அன்றே கிடைத்த தகவலின் பேரில் மேலகரம் அரசு ஆண்கள் பள்ளி அருகே எதிரிகள் பாலமுருகன், மாசாணம், இளஞ்சிறார் வேல்முருகன் ஆகிய மூவரிடமிருந்தும் சாட்சிகள் முருகேசன், செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் வெடிக்காத 6 எலக்ட்ரிக் டெட்டனேட்டர்கள் மற்றும் உதிரி பாகங்கள் உள்ள பிளாஸ்டிக் பாட்டிலை 16.00 மணிக்கு கைப்பற்றினேன். இளஞ்சிறாரை கூர்நோக்கு இல்லத்தில் வைக்க உரிய அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தேன். மேற்படி பொருட்களை செயலிழக்க செய்ய திருநெல்வேலி நகர வெடி குண்டு மற்றும் செயலிழப்பு பிரிவுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். அந்த வேண்டு கோள் கடிதம் அ.சா.ஆ.62 ஆகும். 6.2.2008 அன்று தென்காசி குற்றவியல் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வழக்கின் எதிரிகள் ரவி மற்றும் KTC குமாரை மூன்று நாட்களுக்கு போலீஸ் காவலில் விசாரிக்க அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு

அவர்களை போலீஸ் காவலில் எடுத்து விசாரித்தேன். 7.2.2008 ம் தேதி சாட்சிகள் சின்னத்துரை, ஜான்சன், கிராம நிர்வாக அதிகாரி பாலசுப்பிரமணியன், கிராம உதவியாளர் சுப்பையா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி போலீஸ் காவலில் இருந்த எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் 7.2.2008 ம் தேதி தென்காசி பழைய அரசு மருத்துவமனையில் மேல்புறம் உள்ள பெருமாள் கோவிலுக்கு தென்புறம் இருந்த பாக்கெட்டில் இருந்த மஞ்சள் பவுடரை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.63 ஆகும். பின்பு எதிரிகளை திருநெல்வேலிக்கு அழைத்துச் சென்ற போது அவர்கள் மேம்பாலத்திற்கு வடபுறம் உள்ள ஜான்சன் டிரேடர்ஸ் கடையை அடையாளம் காட்டினர். சாட்சிகள் சின்னத்துரை, ஜான்சன் ஆகியோர் எதிரி அந்த கடைக்கு வந்ததாக அடையாளம் காட்டினர். மேலும் மறுநாள் குமார் மட்டும் வந்து கப்ளிங் அளவை மாற்றி வாங்கி சென்றதாகவும் வாக்குமூலம் கொடுத்தனர். 8.2.2008 ம் தேதி சாட்சிகள் பழனி, ஞானப்பால், ஆகியோர்களின் வாக்குமூலம் பதிவு செய்தேன். போலீஸ் காவலில் இருந்த KTC குமார் ஏற்கனவே சொல்லியிருந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் 23.01.2008 அன்று KTC குமார் வீ.கே.புறம் ஊருக்கு வடக்கே மண்பொத்தே என்ற இடத்தில் வெடி குண்டு சோதனை செய்து பார்த்த இடத்தை 8.2.2008 அன்று பார்வையிட்டு அங்கு இருந்த வெடித்து சிதறிய இரண்டு மெட்டல் கப்ளிங் குண்டுகளையும் சிறிய அளவு மண் முதலியவற்றையும் சாட்சிகள் பழனி, ஞானபால் முன்பு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.64 ஆகும். அன்று 15.00 மணிக்கு எதிரி ரவியிடம் தென்காசி கிராம நிர்வாக அதிகாரி மற்றும் உதவியாளர் ஆகிய சாட்சிகள் முன்பாக மீண்டும் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து அதன் அடிப்படையில் எதிரி ரவி பரதன் தியேட்டருக்கு எதிர் புறம் உள்ள எதிரியின் கம்ப்யூட்டர் சென்டருக்கு அழைத்துச் சென்று அடையாளம் காண்பித்து ஆஜர் செய்த வெடி குண்டுகள் தயாரிக்க பயன்படுத்தப்படும் சால்ரீன், டிரில்லிங் மிஷின், மெக்கானிச புத்தகம், கப்ளிங் வாங்கிய ரசீது, ரசாயான கோடுகள்

எழுதிய சிறிய துண்டு பேப்பர் ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்பாக கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.65 ஆகும். 9.2.2008 அன்று சாட்சி நவீஜார்ஜ், ஜேக்கப் ஆகியோரை விசாரித்து எதிரி கே.டி.சி.குமார் தங்கள் கடையில் 40 சுவிட்சுகள் வாங்கியதாக கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 13.2.2008 அன்று சாட்சிகள் முருகேசன், துணை கண்காணிப்பாளர் ஆசீர் விஜயகுமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட வெடி குண்டுகள், வெடித்து சிதறிய பாகங்கள், அழுத்தம் மிகுந்த குண்டுகள் எனவும் தெரிவித்தனர். எதிரிகள் கே.டி.சி குமார், ரவி ஆகியோரை 17.2.2008 வரை போலீஸ் காவலில் எடுத்து விசாரணை செய்யப்பட்டது. 15.2.2008 அன்று சாட்சிகள் வெள்ளைச்சாமி, கிராமநிர்வாக அதிகாரி, கிராம உதவியாளர், தேன் பொத்தை சுடலையாண்டி, ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வழக்கில் சம்மந்தப்பட்ட சிவா என்ற சிவானந்தம் என்பவரை செங்கோட்டை வட்ட ஆய்வாளர் சாட்சிகள் முன்னிலையில் கைது செய்து, சொத்துக்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.66 ஆகும். மேற்படி எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 16.2.2008 அன்று சாட்சி பாலசுப்பிரமணியன், சுப்பையா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 19.2.2008 ம் தேதி அன்று எதிரி சர்மா என்ற நாராயண சர்மா என்பவரை செங்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பிரிவு 164 குவிமுச வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 27.2.2008 அன்று எதிரி சிவா என்ற சிவானந்தத்தை 14.00 மணி முதல் 29.02.2008, 14.00 மணி வரை போலீஸ் காவலில் எடுத்து விசாரித்தேன். 29.02.2008 மேற்படி எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அழைப்பின் பேரில் ஆஜரான கேரளா மாநிலத்தை சேர்ந்த அபிலாஸ், ராஜுவ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 3.3.2008 அன்று ஏற்கனவே நீதிமன்ற காவலில் இருந்த எதிரிகள் இஸ்மாயில் என்ற மாரியப்பன் ஆகியோரை மாதிரி கைது செய்ய ஆவன செய்யப்பட்டது. அதன் படி 5.3.2008

அன்று இஸ்மாயில் என்ற மாரியப்பன், மாடசாமி ஆகியோரை உதவி ஆய்வாளர் தமிழ் செல்வி கைது செய்துள்ளார். 7.3.2008 அன்று கேரளா மாநிலத்தை சேர்ந்த சாட்சி அபிலாஸ் மற்றும் ராஜுவ் ஆகியோர்களிடம் செங்கோட்டை நீதிமன்றத்தில் பிரிவு 164 குவிமுசபடியான வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த வழக்கின் முதலாவது எதிரி ரவி என்ற ஆறுமுகம் என்பவரின் சகோதரர்கள் குமார்பாண்டியன், செந்தில், சேகர், சுரேஷ் ஆகியோர் இந்து முஸ்லீம் கலவரத்தில் கொல்லப்பட்டதன் விளைவாக பழிவாங்கும் நோக்கத்தில் வழக்கு எதிரிகள் அனைவரும் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதால் எனது புலன் விசாரணை முடித்து 24.10.2008 அன்று எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 120(பி), 307 இதச மற்றும் 3 மற்றும் 5 உ/இ இந்திய வெடிப்பொருள் சட்டம், மற்றும் பிரிவு 3(1) தமிழ்நாடு பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பது தடுக்கும் சட்டம் ஆகியவற்றின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை நேரமின்மை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு
செய்யப்பட்டு வாசித்துக்காட்ட சாட்சியால் சரி
என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.